# ராஜீவ் காந்தி இன்று மாலை சென்னை வருகிறார்

எம். ஜி. ஆர் ஹெலிகப்டரில்

## வெள்ளை நிலையைப் பார்வையிட்டார்

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 2 15-11-85 வெள்ளிக்கிழமை (ஐப்பசி 30 ரபியு அவ் 2) முழக்கம் 280

தமிழகத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புகளை நேரில் சென்று பார்வையிடுவதற்காக இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி இன்று மாலை விசேஷ விமானப்படை விமானமொன்றில் தமிழகத்திற்கு விஜயம் செய்யவுள்ளார். பிற்பகல் 3.30 மணியிலிருந்து நான்கு மணி நேரத்திற்கு சென்னையிலும், மற்றைய இடங்களிலும் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புக்களை பிரதமர் பார்வையிடுவார். இதேவேளையில் தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன், நிதி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. முத்துசாமி, ஆகியோர் சகிதம் சென்னையிலும், தஞ்சாவூர், வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, செங்கற்பட்டு ஆகிய இடங்களிலும் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகளை விசேட ஹெலிகப்டர் ஒன்றில் சென்று நேற்று பார்வையிட்டார், வீடிழந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களையும் நேரில் சென்று பார்வையிட்ட முதலமைச்சர் உடனடியாக நிவாரண வேலைகளுக்கு உத்தரவிட்டுள்ளார். வெள்ளப் பெருக்கினால் மக்களுக்கு பெரும் இன்னல்கள் ஏற்பட்டுள்ள போதிலும் நிவாரண வேலைகள் துரித கதியில் இடம் பெற்று வருவதால் இதனையிட்டு கவலையடையத் தேவையில்லை எனவும் முதல்வர் தெரிவித்தார்.

★ அரசாங்கம் எடுத்துள்ள மற்றொரு நடவடிக்கை

# தமிழ்ப் பகுதிகட்கு செல்வதற்கு வெளிநாட்டவருக்குத் தடை!

## இவர்களுக்கு டிக்கட் வழங்கக்கூடாதென புகையிரத நிலைய அதிபர்களுக்கு உத்தரவு

(பி. கிறிஸ்ரி ரஞ்சன்)

**தமிழ்ப்பகுதிகளுக்கு வெளிநாட்டவர்கள் விஜயம் செய்வதை முற்றாகத் தடை செய்யும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது, உல்லாசப்பயணிகள், பத்திரிகையாளர்கள் மட்டுமன்றி, வேறு நட்பு ரீதியிலும்கூட வெளிநாட்டவர் தமிழ்ப்பகுதிகட்கு விஜயம் செய்வதை அரசாங்கம் நிறுத்த முடிவு செய்துள்ளது.**

இதன் ஓர் நடவடிக்கையாக தமிழ்ப்பகுதிகட்கு விஜயம் செய்வதற்கு எந்த வெளிநாட்டவருக்கும் டிக்கட் வழங்கக்கூடாதென சகல புகையிரத நிலைய அதிபர்களும் பணிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக புகையிரத இலாகா வர்த்தக அத்தியட்சகரால் சகல புகையிரத நிலைய அதிபர்களுக்கும் விடுக்கப்பட்டுள்ள உத்தரவில் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களுக்கும், அனுரதபுரத்துக்கு வடக்காலுள்ள பகுதிகட்கும் செல்வதற்குரிய புகையிரத பயணச் சீட்டுகளை

—6ஆம் பக்கம் பார்க்க

## வடபகுதியின் சகல ரயில் சேவைகளும் இன்று ரத்து

காங்கேசன்துறைக்கும் மருதானைக்கும் இடையேயான சகல ரயில் சேவைகளும் இன்று ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மலையகப் பகுதிகளில் இன்று மேற்கொள்ளப்படவுள்ள ஹர்த்தாலையொட்டி பாதுகாப்பு நடவடிக்கையாகவே இச் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

மருதானையிலிருந்து இன்று காலை புறப்படும் யாழ்தேவி அனுராதபுரம் வரையிலேயே சேவையிலீடுபடும். உத்தரதேவி, இன்ரஸிற்றி ரயில் சேவைகள் முற்றாக ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

## மலையகத் தமிழருக்காக இன்று ஹர்த்தால் அனுஷ்டிப்பு

பெருந்தோட்டத் தொழிலாளர்களை நாடற்றவர்களாக்கி அவர்களது வாக்குரிமை பறிக்கப்பட்ட இலங்கை குடியுரிமைச் சட்டம் இந்திய பாகிஸ்தான் குடியுரிமைச் சட்டம் என்பன நிறைவேற்றப்பட்ட தினத்தைக் குறிக்கும்முகமாக படத்துடன் கூடிய சுவரொட்டிகளை 'ஈரோஸ்' இயக்கம் வெளியிட்டுள்ளது.

கைகளில் விலங்கிடப்பட்ட நிலையில், மலையகப் பெண் ஒருத்தி வாயிலும் பூட்டால் பூட்டப்பட்ட நிலையில் தேநீர் கோப்பையை ஏந்தியவாறு நிற்பதாக சுவரொட்டியில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

"1948 நவம்பர் 15ல் நாம் நாடற்றவரானோம்; மலைகளில் உரமானோம்; தேநீரில் இரத்தமானோம்; ஆனாலும் இந்த மண்ணில் அந்நியராக்கிவிட்டார். ஆதலால் எமது மண்ணை உடமையாய் மாற்றுவோம்; போராடுவோம்" என்று சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டுநகர் நேற்றும் சோதனை கைதானோர் தடுப்புக்காவலில்

(மட்டுநகர்)

மட்டக்களப்பின் பல தமிழ்ப் பகுதிகளும் நேற்றும் ஆயுதப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டுக் கடும் சோதனைக்குள்ளாக்கப்பட்டதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

சுமார் இருநூறு தமிழ் இளைஞர்களும், வர்த்தகர்களும் விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின்னர் சிலர் மட்டுமே விடுதலை செய்யப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

மிகுதிப் பேர் பாரிய வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்டனராம். நேற்று முன்தினம் கைதான முப்பது பேரைப் பற்றிய தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்ட ஒன்பது தமிழ் இளைஞர்களின் சடலங்கள் நேற்று மட்டுநகர் ஆஸ்பத்திரியில் பிரேத பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன.

### அரசாங்க விளம்பரம்

(ஒட்டுசுட்டான்)

போர் நிறுத்த கண்காணிப்புக் குழு முன்பாக பொது

...6ஆம் பக்கம் பார்க்க

## ஜி.சி.ஈ. பரீட்சை அதிகாரிகள் கூட்டம் 'நாளை வேம்படியில்

அடுத்த மாதம் நடைபெறும் க.பொ.த. (சாதாரண) தரப் பரீட்சையோடுசம்பந்தப்பட்ட இணைப்பு அதிகாரிகள், மேலதிக இணைப்பதிகாரிகள், உதவி இணைப்பதிகாரிகள், மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குநர்களை நாளை சனிக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் கூட்டத்திற்கு தவறாது சமுகம் கொடுக்குமாறு கல்விப் பணிப்பாளர் திரு எம். சிமியாம்பிள்ளை வேண்டியுள்ளார்.

மேலதிக இணைப்பதிகாரிகளுடைய கூட்டம் காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகும்.

இணைப்பதிகாரிகள், உதவி இணைப்பதிகாரிகள், நல்லூர்,

—6ஆம் பக்கம் பார்க்க

### ஜி. சி. ஈ. பரீட்சை டிசம்பர் 7-ல்

(புங்குடுதீவு)

க. பொ. த. (சா. த.) பரீட்சை எதிர்வரும் டிசம்பர்

—6ஆம் பக்கம் பார்க்க

## கண்ணிவெடி தாக்குதல், 9 பேர் கொலையுண்ட இடங்களையும் கண்காணிப்பு குழு பார்த்தது!

யுத்த நிறுத்தத்தை அமுல் செய்வதாகக் கூறிக்கொண்டு தீவிரவாதிகளின் முகாம்களைத் தேடுவதென்ற போர்வையில் வீடுவீடாகச் சென்று அப்பாவித் தமிழ் மக்களை ஆயுதப் படையினர் இம்சைப்படுத்தி வருவதாக மட்டக்களப்பு பிரஜைகள் குழுவினர், யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள்ளனர்.

மட்டக்களப்புக்குச் சென்றுள்ள கண்காணிப்புக் குழு நேற்று இரண்டாவது தினமாக அங்கு விசாரணை நடத்தியதுடன், பாதிக்கப்பட்ட இடங்களையும், ஆயுதப்படையினரின் முகாம்களையும் சென்று பார்த்தது.

குழு முன்னால் சுமார் இருநூறு பேர் சாட்சியமளிக்கத் தயாராகவிருந்தனராயினும்

—6ஆம் பக்கம் பார்க்க

### தொலைபேசி அழைப்பு 1 ரூபா 10 சதம்

நேற்று முதல் உள்ளூர் தொலைபேசி அழைப்புகள் முதல் மூன்று நிமிடங்களுக்கும் ஒரு ரூபா பத்து சதமாக உயர்ந்துள்ளது.

முன்னர் இக்கட்டணம்

-6ஆம் பக்கம் பார்க்க

## இறைச்சி உண்ட ஐவருக்கு திடீர் வயிற்றோட்ட நோய்

நெல்லியடிப் பகுதியில் இறைச்சிக்கறி சாப்பிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் வயிற்றோட்ட நோய்க்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நெல்லியடி மத்திய சந்தை

...6ஆம் பக்கம் பார்க்க

தமிழ் மக்கள் விரும்பிப் படிக்கும் பத்திரிகை ஈழமுரசு

## வரிவிளம்பரம்

**வீடு வாடகைக்கு**

கச்சேரி, பாடசாலைகளுக்கு சமீபமாக வீடு (அனெக்ஸ்) வாடகைக்குண்டு. விபரங்களுக்கு: மு. தேவகுரு 33, ஸ்ரான்லி கல்லூரி முன்வீதி, கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம்.

## கட்டடத் திணைக்களப் பதவியுயர்வு

கட்டடத் திணைக்களத்தின் பிரதம பரிசோதகரான ஆ. தயானந்தன் அதன் பொறியியலளராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

யாழ். தேசிய வீடமைப்புத் திணைக்கள மாடிக்கட்டடம், குருநகர் மாடி வீட்டுத்திட்டம் ஆகியவற்றில் பொறுப்பதிகாரியய் கடமை புரிந்து இவற்றினை திட்டமிட்டகாலத்துக்கு முன்னமே கட்டி முடித்துள்ளார்.

பிரதமரின் பத்துலட்சம் வீட்டுத்திட்டத்தின்படி இலங்கையில் முதன் முதலாக யாழ், நகரில் ஐம்பத்து மூன்று நாட்களில் வீட்டைக் கட்டி முடித்து ஒரு சாதனையை நிலைநாட்டி பிரதமரின் பாராட்டையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவரான இவர் தற்போது கண்டி மாவட்டத்திலுள்ள மிருக உற்பத்தி திட்டத்தின் கட்டடத் தொகுதிகளின் நிர்மாணப் பொறியியலாளராக கடமைபுரிகிறார்.

## கல்விப் பணிப்பாளர் அனுமதி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்தில் ஏழாம் ஆண்டிற்கான வகுப்பு ஒன்றை புதிய ஆண்டிலிருந்து மேலதிகமாக நடத்துவதற்கு வடமாநில கல்விப் பணிப்பாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

இந்த வித்தியாலயத்தின் அதிபர் திரு. கே. எஸ். பொன்னையா மேற்கொண்ட விடா முயற்சியின் பயனாகவே 1986 ம ஆண்டு ஜனவரி முதல் 7ம் ஆண்டிற்கான வகுப்பை நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது

புதிய ஆண்டு ஜனவரி முடிவில் இப்புதிய ஏழாம் ஆண்டு வகுப்பில் சேர்ந்துள்ள மாணவர்களின் தொகையை சாவகச்சேரி வட்டாரக் கல்வியதிகாரிஊடாக கல்விப்பணிப்பாளருக்குத் தெரிவிக்கும்படியும், கல்விபபணிப்பாளர் தனது அனுமதிக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஈழத் தமிழ் மக்களே!
உங்கள் இனத்தவர்
படும் துயரங்களை
நீங்கள் படித்தாவது
அறியவேண்டாமா?

**திருமலைக் கொடுமைகள்**

திருமலை மக்கள் சமீபத்தில் பட்ட கொடும் துயரங்களை – அவர்களின் கண்ணீர்க் கதைகளை அவர்களிடமே நேரில்கேட்டு எழுதியிருக்கிறார்.

**கா. யோகநாதன்**

இது ஒரு
'வரதர் வெளியீடு'

**விலை ரூபா: 5**

உங்கள் புத்தக
விற்பனையாளரிடம் கேட்டு
வாங்குங்கள்.

## மருந்துகள் தட்டுப்பாடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி அரசாங்க ஆஸ்பத்திரியில் பல முக்கிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுளளது.

குறிப்பாகக் காய்ச்சலுக்குக் கொடுக்கப்படும் ''டிஸ்பிறின்'' ''அஸ்பிறின்'' மாத்திரைகளுக்கே தட்டுப்பாடாகவுள்ளது. காய்ச்சல்காரரை டிஸ்பிறின், அஸ்பிறின் மாத்திரைகளை வெளிக்கடைகளில் வாங்கும்படி டாக்டர்கள் ஆலோசனை கூறுகிறார்கள் என்றால் ஏனைய விலைமதிப்புள்ள மருந்துகள் பற்றிக் குறிப்பிடவும் வேண்டுமா? எனமக்கள் கேட்கிறார்கள்.

## முரசுமோட்டை சுகாதார சிகிச்சை நிலையம்

(பரந்தன்)

முரசுமோட்டைப் பகுதிக்கான ஆரம்ப சுகாதாரச் சிகிச்சை நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையம் கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்க ஊரியான் கிளைக் கட்டடத்தில் இயங்கிவருகின்றது. இந் நிலையத்தைக் கண்காணிக்க ஆரம்ப சுகாதாரக் குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

குழுவின் தலைவராக திரு. பே. சச்சிதானந்த சுந்தரமும், செயலாளராக திரு. மு. கந்தசாமியும், உபதலைவராக திருமதி செ. சுந்தரேஸ்வரனும், உபசெயலாளராக திரு. சி. இராசநாயகமும் பொருளாளராக திரு. ப. ஸ்ரீ அனந்தராசாவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மேற்படி சிகிச்சை நிலையம் தினமும் பிற்பகல் 3 மணி முதல் 4 மணி வரை இயங்கி வருகின்றது.

**மரம் நாட்டல்:**

## கல்வியதிகாரி தீவிர கரிசனை

(ஒட்டுசுட்டான்)

பாலைவனங்களாக மாறிவரும் பகுதிகளை மீண்டும் சோலைவளமாக்க பாடசாலை அதிபர்களின் ஒத்துழைப்பை மாங்குளம் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. எம். சிவானந்தம் நாடியுள்ளார்.

மழை காலத்திலே நாட்ட வேண்டிய மர வகைகள் பராமரிப்புக்கு வேண்டிய ஒழுங்குகள் ஆகியனபற்றிய விபரங்களை அதிபர்களிடமிருந்து கோரி வகைப்படுத்தி வன இலாகா விவசாய விரிவாக்கல் திணைக்களம் ஆகியவற்றோடு தொடர்புகொண்டு ஆவன செய்துவரும் அவரின் முயற்சிக்கு அதிபர்களும் ஆசிரியர்களும் பூரண ஒத்துழைப்பை நல்க முன்வந்துள்ளார்கள்.

## வீதி ஒரே குண்டும் குழியும்..

(சரசாலை)

புத்தூரில் இருந்து சுன்னாகம் வரையிலான சாவகச்சேரி-சுன்னாக வீதி ஒரே குண்டும்குழியுமாக காட்சியளிக்கின்றது. சாவகச்சேரியிலிருந்து சுன்னாகம் செல்லும் வாகனங்கள் மேற்படி வீதியில் உள்ள கிடங்குகளில் வீழ்ந்து வீழ்ந்துதான் செல்ல வேண்டியுள்ளது. இதனால் வாகனங்களின் ரயர்கள் பழுதடைவதோடு மட்டுமல்ல வாகனங்களும் சேதமாகும் நிலையும் உள்ளது. மேற்படி சாவகச்சேரி-சுன்னாக வீதியை திருத்த ஆவன செய்தால் நல்லதென பொதுமக்கள் விரும்புகிறார்கள்.

## காசிகாண்டம்

கொல்புரம் வழக்கம்பரை அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 16ம் திகதி ''காசிகாண்டம்'' புராணபடலம் படிப்பு நடை பெறும்.

## வெள்ளத்தால் பாதிப்புகள்

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் கடந்த ஒரு வார காலமாகத் தொடர்ந்து பொழிந்துவரும் பெருமழை காரணமாக மக்கள் பெரும் அவதிக்குள்ளாகி உள்ளனர். தாழ்ந்த நிலப்பகுதியில் வாழ்ந்த குடிசை வாசிகள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி உறவினர்களது இல்லங்களில் தங்கியுள்ளனர்.

இங்குள்ள குளங்கள், கிணறுகள் அனைத்தும் நீர் நிரம்பி வழிகின்றன. பிரதான வீதி உட்பட பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் வாகனப் போக்குவரத்துக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

புயற்காற்று, பெருமழை காரணமாக இப்பகுதி மீனவர்கள் கடந்த மூன்று தினங்களாகத் தொழிலுக்குச் செல்லவில்லை. அண்மையில் நெல் விதைப்பு மேற்கொள்ளப்பட்ட நெல் வயல்கள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கிவிட்டன. இதனால் இம்முறை இங்கு நெற்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டதாக விவசாயிகள் கூறுகிறார்கள்.

## எழுத்தாள மாணவர் சித்தி

(கரவெட்டி)

இவ்வாண்டு நடைபெற்ற ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் உடுப்பிட்டி வட்டாரப்பாடசாலைகளுள் கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரியைச் சேர்ந்த ஆறு மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர். இவர்களில் ஐவர் இக்கல்லூரியின் கையெழுத்துச்சஞ்சிகைகளின் ஆசிரியர்கள் என்பதும் எழுத்துத்துறையிலும் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் இம்மாணவர்களை இக்கல்லூரியின் ஆசிரியர் திரு. சி. வல்லிபுரம் அவர்களே வழிகாட்டி வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கன;

சித்திபெற்ற மாணவர்களின் பெயர் விபரங்களும் அவர்கள் நடாத்தும் கையெழுத்துச் சஞ்சிகைகளின் விபரங்களும் வருமாறு: கு. கஜேந்திரா (மந்த மாருதம்) ஆ. மயூரன் (வசந்தம்) ச. பிரபாகரன் (தளிர்) வி. பரமதாஸ் (தாரகை) த. சுகந்தன் (மல்லிகை) சிறீகர் தவேள்.

## திரும்பவும் கிடைத்தபோது....

(ஒட்டுசுட்டான்)

கடந்த வாரம் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்துக்குச் சொந்தமானதும் பாவிக்கக்கூடிய நிலையில் இருந்ததுமான நீரிறைக்கும் இயந்திரம் ஒட்டுசுட்டான் இராணுவப் பொறுப்பதிகாரியினால் எடுத்துச் செல்லப்பட்டது.

பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை அந்த நீரிறைக்கும் இயந்திரம் பாவிக்க முடியாத நிலைமையில் திரும்பவும் மகாவித்தியாலய நிர்வாகத்திடம் கொண்டு வந்து ஒப்படைக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

## சித்திரத்தேர் உருவாகிறது

(சாவகச்சேரி)

விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகருக்கு புதியதோர் சித்திரத்தேர் உருவாகிறது. இளைப்பாறிய தபாலதிபர் திரு. கே. செல்லப்பாவின் உபயமாக உருவாகும் இப்புதிய சித்திரத்தேரை, பிரபல சித்திரக்கலைநிபுணர் நீர்வேலியூர் செ. விஸ்வலிங்கம் ஆச்சாரியார் உருவாக்கி வருகிறார்.

பல லட்சம் ரூபா செலவில் உருவாக்க் கொண்டிருக்கும் இப்புதிய தேருக்கான பவளக்கால் நாட்டு வைபவம் சிறப்பாக நடைபெற்றது

## ★ பிறந்தநாள் வாழ்த்து ★

✻ திருவையாறு கோபாலராசா சத்தியரூபாதேவி தம்பதியின் மகள் துஷ்யந்தி இன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ யாழ் - ஸ்ரான்லி வீதி செல்வரத்தினம் இந்திராதேவி தம்பதியின் மகள் செல்வ கோனேஸ்வரி இன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ உரும்பராய் வடக்கு குணரத்தினம் ஜெயராணி தம்பதியின் மகள் அபிராமி இன்று தனது பத்தாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

✻ நல்லூர் ஞானேந்திரன் திலகவதி தம்பதியின் மகன் பிரசாத் இன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்:

✻ குமரபுரம் தங்கராஜா வசந்தாதேவி தம்பதியின் மகள் நிஷாந்தினி இன்றுதனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ கைதடி கிழக்கு கந்தசாமி இந்திராணி தம்பதியின் மகன் குகிதன் இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ கோப்பாய் வடக்கு கந்தசாமி சிவசோதி தம்பதியின் மகள் கலைச்செல்வி இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ சங்குவேலி வடக்கு இந்திரன் மலர் தம்பதியின் மகன் அலக்ஸ் ஜனார்த்தனன் இன்று தனது பன்னிரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

## தெரிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலிருந்து 1985 ம் ஆண்டிற்கான புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய நாற்பது மாணவர்கள் மத்தியில் நான்கு மாணவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## சைக்கிள்கள் நிறுத்தத் தடை

(கொடிகாமம்)

சாவகச்சேரி சந்தை, பஸ் நிலையப் பகுதிகளில் சந்தை நாட்களில் சைக்கிள்கள் நிறுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் அடிக்கடி சைக்கிள் திருட்டுக்கள் இடம்பெற்று வருவதினாலும், வர்த்தக நிலையங்களின் முன் சைக்கிள்கள் நிறுத்துவதை வர்த்தகர்கள் எதிர்ப்பதனாலுமே இளைஞர்களால் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

சைக்கிள்களை பாதுகாப்பாக நிறுத்துவதற்கென இங்கு இரு விசேட சைக்கிள் தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## மாணவர்கள் தெரிவானார்கள்

(வேலணை)

வேலணை கல்வி வட்டாரத்தில் நடைபெற்ற அரசினர் புலமைப் பரீட்சையில் தோற்றிய பாடசாலைகளிலிருந்து பதினெட்டு மாணவர்கள் புலமைப் பரிசிலைப் பெறுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

## வேண்டுகோள்

சண்டிலிப்பாய் கிராமசேவகர் பிரிவில் ஏற்படும் சிறு சச்சரவுகள், எல்லைத் தகராறுகள், வேலிப் பிரச்சினைகள், வீட்டுப் பிரச்சினைகள் ஆகியவற்றை இரு வாரங்களுக்கு ஒரு முறை ஞாயிற்றுக்கிழமைகளில் சமாதான சபை கூடி ஆராய்ந்து தீர்த்து வருகின்றது.

கோயிற் காணிகளை சிலர் தமது உடமைகளாக ஆக்கிக் கொண்டமை தொடர்பாக பொதுமக்களால் செய்யப்பட்ட முறையீடுகள் பற்றி சபை விசாரணை செய்து வருகிறது. கோயிற் காணிகள் பற்றிய விபரங்கள் தெரிந்தவர்கள் சபையின் செயலாளர் திரு.மு. பரராசசிங்கத்திடம் அறிவிக்குமாறு சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

## மரண அறிவித்தல்

### இளையதம்பி வயித்தியலிங்கம்

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, 237ம் இலக்கத்தைச் சேர்ந்த இளையதம்பி வயித்தியலிங்கம் (பொறியியலாளர்) வியாழன் காலை சிவபதமடைந்துவிட்டார். இவர் ஈஸ்வரியின் அன்புக் கணவரும், சியாமளா (பாரெயின்); பிரேமளா (ஆசிரியை, கொக்குவில் இந்துக்கல்லூரி); மேகலா; சிறகலா (கனடா); சுத்தானந்தன் (யாழ். வளாகம்); சிவகலா (இந்தியா) ஆகியோரின் அன்புத்தந்தையும், டாக்டர். ஜெயவிக்கிரமராஜா (பாரெயின்); டாக்டர் சிறீஸ்காந்தன் (யாழ். ஆஸ்பத்திரி); செந்தில்வேல் (டொலர் கோப்பரேசன்); கலாநிதி ஆனந்தகுமார் (கனடா) ஆகியோரின் மாமனாரும்; நரேந்திரன், ஜனார்த்தனன், அமிர்தவர்ஷினி, செந்திநந்தனன் ஆகியோரின் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று 14 ம் திகதி வியாழக்கிழமை மாலை நான்கு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வில்லூன்றி மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெற்றன.

உற்றார், உறவினர் தயவு செய்து இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்; டாக்டர் சிறீஸ்காந்தன்
237, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### சு. புஷ்பராஜன்

(பலாங்கொடை முஸ்லீம் வித்தியாலய ஆசிரியர்)
14-11-1985 புதன் கிழமை காலமாகிவிட்டார்.

மரணக் கிரியைகள் 15-11-1985 மு. ப. 10.00 மணியளவில் நடைபெறும்.

புஷ்ப மஹால்
வதிரி
அல்வாய்.

க. நா சுப்பிரமணியம்,
திருமதி. தீபமலர் புஷ்பராஜன்.

## ஆங்கில தினப் போட்டி

# சரியான அறிவில்லாததால் மாணவர் பங்குபற்றவில்லை

(கொடிகாமம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக் டையே நடை பெற்ற ஆங்கில தின இறுதிப்போட்டிகள் பற்றிய அறிவித்தல் உரிய நேரத்தில் அனுப்பப் படாததினால் சாவகச்சேரி, வட்டுக் கோட்டை கல்வி வட்டாரங்களைச் சேர்ந்த மாணவர்கள் இப் போட்டிகளில் பங்குபற்ற முடியாமல் போய்விட்டது.

கடந்த 8ம், 9ம் திகதிகளில் நடைபெற்ற இந்த மாவட்டப் போட்டி பற்றிய அறிவித்தல்கள் சாவகச்சேரி, வட்டுக் கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரிகளுக்கு கடந்த 8ம் திகதியே கிடைக்கப் பெற்றதாம்.

இறுதி நேரத்தில் கிடைக்கப் பெற்ற இவ் அறிவித்தல்பற்றி வட்டாரக்கல்வி அதிகாரிகளால் பாடசாலைகளுக்கு அறிவிக்க முடியாமல் போனதால் இவ்விரு வட்டாரங்களையும் சேர்ந்த மாணவர்களால் யாழ். மாவட்டப் போட்டிகளில் பங்குபற்ற முடியவில்லை.

# பாசறையில் பரி. யோவான் கடற்சாரணர் குழு முதலிடம்!

(நல்லூர்)

யாழ் மாவட்ட சாரணர்களின் வருடாந்தப் பாசறை நிகழ்ச்சிகளில் பரி. யோவான் கல்லூரி கடற் சாரணர் குழு முதலாம் இடத்தைப் பெற்றது.

யாழ். பழைய பூங்காவில் இரண்டு நாட்கள் நடைபெற்ற வருடாந்தப் பாசறையில் அணிநடைப்பயிற்சி மைதானக் காட்சி ஆகிய நிகழ்ச்சிகளில் 3-ம் இடத்தையும், சாரண விடுதிகள், வேலைவாரம் 85, பாசறைப்பரிசோதனை, சமூக சேவைகள் ஆகிய நிகழ்ச்சிகளில் 2-ம் இடத்தையும், பாசறைத் தீ நிகழ்ச்சியில் முதலாம் இடத்தையும் பெற்றனர்.

பாசறைத் தீ நிகழ்ச்சியில் ''சாரணியமும் உலக சமாதானமும்'' என்ற நாடகமே இக் குழுவால் நடிக்கப்பட்ட நாடகமாகும். இந்த நாடகம் செல்வன் ஆர். ஜனகனால் நெறிப்படுத்தப்பட்டது. பரி. யோவான் கல்லூரி கடற் சாரணர் குழுவுக்கு கல்லூரி ஆசிரியர்களான திருவாளர்கள் ரி. கே. சண்முகலிங்கமும், நரேந்திரநாதனும் பொறுப்பாக இருந்தனர்.

பாசறையில் கலந்து கொண்ட சாரணர்களில் பரி. யோவான் கல்லூரி கடற் சாரணர் குழு முதலாம் இடத்தையும், பரி. யோவான் கல்லூரிச் சாரணர்குழு இரண்டாம் இடத்தையும், யாழ். இந்துக் கல்லூரிச் சாரணர்குழு மூன்றும் இடத்தையும் பெற்றது.

இறுதி நாள் நிகழ்ச்சியின் போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட திரு. இராமநாதன் சாரணியச் சேவை பற்றிக் கருத்துரை வழங்கியதுடன் வெற்றி பெற்ற குழுக்களுக்கு தராதரப்பத்திரங்களையும், கேடயங்களையும் வழங்கினர்.

## நுணுவில் வைபவத்தில் கல்விப்பணிப்பாளர்:

# கிராமப்புற, நகரப்புற பாடசாலைகள் என்ற பாகுபாடு இப்போது கிடையாது!

(சாவகச்சேரி)

''கிராமப்புற பாடசாலைகள், நகரப்புறப் பாடசாலைகள் என்ற வேறுபாடுகளும், புறக்கணிப்புகளும் கல்வியைப் பொறுத்தளவில் கிடையாது. நகரப்புறப் பாடசாலைகளுக்கு அளிக்கப்படும் அத்தனை வசதிகளும் கிராமப்புற பாடசாலைகளுக்கும் அளிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை உடையவர் இத்தொகுதியின் முன்னுள் எம். பி. திரு. வி. என். நவரத்தினம். அந்த அடிப்படையிலேயே அவரின் பாரிய முயற்சியால் இப்பாடசாலைக்கும் ஒருமாடிக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கைதடி நுணுவில் தமிழ்க்கலவன் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட மாடிக்கட்டடத்தைத் திறந்துவைத்து உரைநிகழ்த்திய வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை கூறினர். பாடசாலை அதிபர் திரு. அ. குமாரவேலு தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில், யாழ். கல்வித்திணைக்களக் கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம், புதியகட்டடத்தினுள் கலைமகள் படத்தை திரை நீக்கம் செய்துவைத்தார். சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. அ தங்கராஜா மங்கள விளக்கை ஏற்றிவைத்தார். கல்விப் பணிப்பாளர் திரு. சிமியாம்பிள்ளை தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்:-

இப் பாடசாலையின் தேவைகள் பற்றி அதிபர் தனது உரையின்போது, விஞ்ஞான, ஆங்கில, கணித ஆசிரியர்கள் தேவை என்றார். உண்மை தான். நாங்கள் கல்வித் திணைக்களத்தில் அதிகாரிகளாக இருந்த போதிலும் எமக்கு மேற்பட்ட அதிகாரிகளும் உண்டு. பாடசாலையின் சராசரி உயரவேண்டும். கல்வித் திணைக்கள சட்ட திட்டங்களுக்குஅமையவே நாம் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். கணித ஆசிரியர் ஒருவரை விரைவில் நியமிப்பதற்கான சிபார்சு செய்யலாம் என்றார்.

கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் பேசுகையில், இந்த நாட்டின் கல்வி வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டவர் எமது கல்விப் பணிப்பாளர். கடந்த நூறு ஆண்டுகளில் இப் பாடசாலை துரித முன்னேற்றமடைந்துள்ளது. ஆகவேதான் உங்கள் முன்னுள் எம். பி. திரு. நவரத்தினம் இப்பெரிய மாடிக் கட்டடத்திற்கு முயற்சி செய்தார். இதே வேளையில் இப் பகுதியில் பெற்றோர் நகரப் பாடசாலை மோகத்தைவிட்டு, இப்பாடசாலைக்கு தமது பிள்ளைகளை பத்தாம் வகுப்புவரை அனுப்பி சராசரியைக் கூட்ட வேண்டும் என்றார்.

வட்டாரக் கல்வியதிகாரி திரு. க. தங்கராஜா பேசுகையில், ஆசிரியர் பற்றுக்குறை இப்பாடசாலைக்கு மட்டும் சொந்தமானது அல்ல என்றார். பாடசாலை அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. வி. எஸ் துரைராஜா உட்படபலர் பேசினர். மாணவர் கதம்ப நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

# அகதிகளும் கருத்துக்களைத் தெரிவிக்க ஒரு சந்தர்ப்பம்

(அரியாலை)

''கச்சேரி- நல்லூர் வீதியில் தமிழ் மகளிர் அவையினல் நடத்தப்படும் அகதி முகாமில் 56 குடும்பங்களைச் சேர்ந்த 237 பேர் தங்கி உள்ளார்கள். வவுனியா, மன்னர், மட்டக்களப்புப் பகுதிகளில் மட்டுமன்றி வடக்குக் கிழக்கு மாகாணங்களை விட ஏனைய பகுதிகளில் இருந்தும் அகதிகள் வந்துள்ளார்கள்.

அரசாங்க ஊழியர்கள் கூட்டுத்தாபன ஊழியர்கள் மட்டுமன்றி விவசாயிகள், கூலிகள், மேசன்கள் எனப் பலதரப்பட்ட தொழிலாளர்களும் அகதிகளாக வந்துள்ளார்கள். இவர்கள் பதின்மூன்று உதவி அரசாங்கஅதிபர்பிரிவுகளில் உள்ள அகதிகள் முகாம்களில் மட்டுமன்றிநண்பர்கள்,உறவினர்கள் தனியார் வீடுகளிலும் தேவாலயங்களிலும் தங்கி உள்ளார்கள்.''

இவ்வாறு கச்கேரி- நல்லூர் அகதிகள் முகாம் பேச்சாளர் திரு. இரா. முருகையா தெரிவித்தார் அவர் மேலும் கூறியதாவது:-

''இவ் அகதிகளுக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்படும் பங்கீட்டுப் பொருட்கள் ஆகக் குறைந்தது 3 மாதத்திற்கும் ஆகக் கூடியது 6மாதத்திற்கும் உதவி அரசாங்க அதிபர்கள் மூலம் வழங்கப்படுகிறது. இது ஐம்பத்தைந்துரூபாவுக்குக் குறையாமலும் இருநூறு ரூபாவுக்குக் கூடாமலும் உள்ளது. மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் உடுதுணி, பால்மா, உணவு என்பன வழங்கப்பட்டபோதும் அகதிகளுக்கு இவை போதாமல் உள்ளது.

இப்பற்றுக் குறைப் பிரச்சினையை ஆராய்வதற்காக எதிர் வரும் 28, 29, 30 ம் திகதிகளில் கூட்டம் நடைபெறும். நடைபெறும் இடம் பின்னர் அறிவிக்கப்படும். 1ம் நாள் அகதிகள் தமது கருத்துக்களைத் தெரிவிக்க வசதிகள் செய்து கொடுக்கப்படும். 2ம் நாள் உதவி அரசாங்க அதிபர்களும், தனியார் நிறுவனங்களும் ஆலோசனை வழங்கும். 3ம் நாள்தீர்மானங்கள் நிறைவேற்றப்படும்'' என்றும் தெரிவித்தார்.

## தமிழ் விழாவில் சொக்கன் பேச்சு:

# இளமையுடன் மிளிரும் கன்னித் தமிழ் ஒருபோதும் அழியாத சிறப்புப் பெற்றது

(குருநகர்)

''தமிழ் தெய்வத் தன்மை வாய்ந்த ஒரு மொழியாகும். அதைப் போன்று பழைமையான சிறப்பு வாய்ந்த மொழி இன்று வேறொன்றும் இல்லை. வடமொழியாகிய ஆரியம் சமயத் தத்துவங்கள் அனைத்தையும் கொண்டதாக விளங்கினும் அதுவும் இன்று பேசப்படாத மொழியாகி விட்டது. ஆனல் என்றும் இளமையுடன் விளங்கும் கன்னித் தமிழ் ஒருபோதும் அழியாத சிறப்புப் பொருந்தியது.''

யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் நடைபெற்ற முத்தமிழ் விழாவுக்கு பிரதம அதிதியாகக் கலந்து உரை நிகழ்த்திய பிரபல எழுத்தாளர் திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) மேற் கண்டவாறு குறிப்பிட்டார். மேற்படி விழா கல்லூரி மண்டத்தில் தமிழ் மன்றத் தலைவி செல்வி அன்ரனிக்கு அல்போன்சஸ் தலைமையில் நடைபெற்றது. விழா மண்டபம் தமிழ் மணம் கமழ மாவிலை, தோறணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது

தொடர்ந்து பேசிய திரு. க. சொக்கலிங்கம் ''இயல், இசை, நாடகமெனும் முத்தமிழையும் பயில்வதற்கு எமது உள்ளம் முதலில் தூய்மையாக இருக்கவேண்டும். மொழியறிவு மட்டும் எமக்கிருந்தால் நாம் தமிழின் முழுமையப்பயனை அடைந்தவராக மாட்டோம். அம்மொழி மூலம் எமது முன்னேரின் பண்பாடு, ஒழுக்க நெறி ஆகியவற்றை அறிந்து அதை எமதாக்கிக் கொள்ள வேண்டும். தமிழைக் கற்றவேற்று நாட்டு அறிஞர் இவை அனைத்தையுமே தமிழ் எனக்கருதி வியந்தனர்.'' என்றார்.

செல்வி அ. அன்ரனிற்று தலைமையுரையில்; ''இந்த இக்கட்டான கால கட்டத்தில் தமிழன்னைக்கு விழா எடுப்பதில் எவ்வளவோ சிரமங்கள் இருந்த போதிலும் மாணவியருக்கு அது ஒரு மகிழ்ச்சி தரும் விடயமே. குறுகிய காலத்தில் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிகள் யாவும் மாணவியரின் சொந்த முயற்சியால் ஏற்பாடு செயயப்பட்டவையாகும் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் தலைசிறந்த எழுத்தாளரான திரு, க. சொக்கலிங்கம் அவர்களின் 'சிலம்பு பிறந்தது' என்னும் நாடகத்தை நாம் கடந்த வருடத் தமிழ் விழாவில் மேடை ஏற்றினேம்'' எனக் குறிப்பிட்டார்.

மேற்படி விழாவுக்கு கல்லூரி ஆசிரியர், மாணவியரும், பாடசாலை அபிவிருத்தி சபை உறுப்பினர்களும், பிறபாடசாலை பிரதிநிதிகளும் சமூகமளித்திருந்தனர். விவாத அரங்கும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. மாணவியர் தலைவி செல்வி அன்ரனிற்று சில்வெஸ்டர் நன்றி கூறினர்.

# 'யோகாசனப் பயிற்சி மூலம் சுக வாழ்வினைப் பெறலாம்'

(சாவகச்சேரி)

'கையில் வெண்ணெய்யை வைத்துக் கொண்டு, நெய்க்கு அலையலாமா? மனித இனத்திற்கு உயர்வான வாழ்வைத்தரக் கூடிய யோகாசனப் பயிற்சிக் கலை நமது கையில் இருக்கும் போது, நோய் என்றும், பிணி என்றும் மனிதன் ஆயுளைக் குறுக்கலாமா? யோகாசனம் சர்வ ரோக நிவாரணி, உடலும், மனமும், ஒன்று சேருவதன் மூலமே யோகாசனம் வெற்றி பெற முடியும்!''

இவ்வாறு நல்வழி இதழ் மாஜிப்பிரதிநிதி திரு. கே. ஜெகநாதன் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில், யோகாசனம் பற்றி நிகழ்த்திய உரையில் கூறினர்.

வித்தியாலய அதிபர் திரு. எஸ். என். இராஜநாயகம் தலைமையில், திரு. ஜெகநாதன் தன் செயல் முறைப் போதனையை நடத்திக் காட்டினர். அவர் தொடர்ந்து தனது உரையில் கூறியதாவது:- நான் பைபிள் அடிப்படையில், மனிதனின் நல்வாழ்வுக்கு வழி காட்டி வருகிறேன். மனித சுகவாழ்வுக்குரிய சட்டங்களாவன:- சுத்தமான காற்று, சமஉணவு, ஓய்வு, அப்பியாசம் என்பனவற்றிற்கு இந்தயோகாசனம் உதவும ஆனல் இது ஒரு சாதாரணமான அப்பியாசம் அல்ல இதில் பல வழிகள் உண்டு. அவற்றில் ஆறு வழிகளே சிறந்தன. அந்த ஆறு அப்பியாசங்கள் ஞானயோக, பக்தியோகா, மந்திரயோகா, கர்மயோகா, ஹாதாயோகா, ராஜயோகா எனப்படும்.

இவற்றில் முதல் நான்கும் ஓரளவு கஷ்டமானவை. இதனல் நோய் பிணியைத்தடை செய்யவும், உடலைக் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கவும் முடியும். சலரோகம், தொய்வு, வாதம், இரத்தக்கொதிப்பு ஆகிய வியாதிகளையும் இதனல் குணப்படுத்தமுடியும்' என்றார்.

## கஷ்டமான வேளையிலும்

# விளையாட்டுப் போட்டிகள் தளர்வின்றி நிகழவேண்டும்

(இருபாலை)

யாழ். பாடசாலைகளின் விளையாட்டுச் சங்கத்தின் பொதுக் கூட்டம் யாழ் இந்துக் கல்லூரியில் கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி அதிபர் திரு. பூ. க. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தை ஆரம்பித்து வைத்த தலைவர் திரு. பூ. க. இராசரத்தினம் உரையாற்றுகையில், ''உதைபந்தாட்டப் போட்டிகள் நடாத்துவதற்கு பொருத்தமான ஒரு மைதானம் இல்லை. இந்த கஷ்டமான சூழ்நிலைகளிலும் போட்டிகளை நாம் நடாத்த முயற்சி செய்ய வேண்டும். போட்டிகள் தொடர்ந்து வருடா வருடம் நடைபெறுவிட்டால் விளையாட்டின் தரம் குறைந்துவிடுமென்பதால் நாம் எம்மால் இயன்றவரை விளையாட்டுக்களை நடாத்தவேண்டும் என்று தெரிவித்தார்.

கூட்டத்தின் முடிவில் சங்கத்தின் நிர்வாகிகள் தெரிவும் இடம் பெற்றது. தலைவர் திரு. எஸ். பஞ்சலிங்கம், அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி, உப-தலைவர்கள் திரு. எஸ். பொன்னம்பலம், திரு. என். நவரட்ணராஜா, செயலாளர் திரு. எம். சோமசுந்தரம், உதவிச் செயலாளர் ஜனுப். கே. எம். கமீட், தனதிகாரி திரு. எஸ். வி. மகேசவேல்.

அத்துடன் திருவாளர்கள் எஸ். இராசதுரை, வி. ஐயாத்துரை, க. இராசரத்தினம். எஸ். செல்லையா, [illegible]. அருணகிரிராஜா, ஏ. பாலசிங்கம் ஆகியோர் அடங்கிய உதைபந்தாட்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

# வருடாந்த கூட்டம்

[வேலணை]

வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பரிபாலன சபையின் வருடாந்த பொதுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை மேற்படி சபைத் தலைவர் திரு. வ. ஐயாத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

# 'புளொட்' எச்சரிக்கை

(சுழிபுரம்)

வீடுகளில் கள்ளு, கசிப்பு ஆகியன விற்கக் கூடாது என்று 'புளொட்' இயக்கத் தொழிலாளர் அமைப்பு அறிவித்துள்ளது.

இவற்றை மீறிநடப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

உதய சிந்தனை

பாலைக்கடைந்தால் வெண்ணெய் பிறக்கும், மூக்கைப் பிசைந்தால் ரத்தம் பிறக்கும்: கோபத்தை வலியுறுத்தினால் சண்டைதான் பிறக்கும்.
-பைபிள்-

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

15-11-85 வெள்ளிக்கிழமை (குரோதன - ஐப்பசி 30)

# ஆனைப்பசிக்கு இம்முறை சோளப் பொரிகூட இல்லை

ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கத்தின் ஒன்பதாவது வரவு செலவுத் திட்டம் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எமது நாட்டில் ஒரு அரசாங்கம் தொடர்ச்சியாக ஒன்பது வருடங்களுக்கு வரவு செலவுத் திட்டங்களைச் சமர்ப்பித்ததென்பது ஒரு சாதனையாகும்.

அதிலும் ஒரு நிதி அமைச்சர் தொடர்ச்சியாக ஒன்பது வரவு செலவுத்திட்டங்களைச் சமர்ப்பித்ததென்பது இதுவே இலங்கை அரசியலில் முதற்தடவையாகும்,

இந்த இரட்டிப்புச் சாதனைகளையும். முன்னாள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரான, இந்நாள் நிதியமைச்சர் றொனி டிமெல் பெற்றுள்ளார்.

தெவிநுவர எம். பீ. யாக வந்து நிதி அமைச்சர் பதவியைப் பிடித்த முன்னாள் சிவில் சேவை அதிகாரியான றொனி டிமெல், சர்வஜனவாக்கெடுப்பில் தமது தொகுதியில் குறைவான வாக்குகளைப் பெற்றதையடுத்து, புலத்சிங்களத் தொகுதிக்கு நியமனம் பெற்ற போதிலும் நிதி அமைச்சர் பதவியைப் பறிபோக விடாது காப்பாற்றிக் கொண்ட சாதனையினால்தான் மேலதிகமாக இரண்டு சாதனைகளை இப்போது புரியக்கூடியதாகவிருந்தது என்பதை இச்சந்தர்ப்பத்தில் நாம் மறந்துவிடக் கூடாது.

அடுத்தாண்டின் மொத்தச் செலவில் மிகப் பெரும் பகுதியை உள்நாட்டுப் பாதுகாப்புக்கு ஒதுக்கிக் கொடுத்த மற்றொரு சாதனையையும் நிதி அமைச்சர் புரிந்துள்ளார் என்று சொன்னால் அது தவறாகாது.

உரிமை கேட்கும் தமிழ்மக்களுக்கு எதிராக, மண்ணைக் காக்கப் போராடும் தமிழ் இளைஞர்களுக்கு எதிராக யுத்தம் புரிந்துவரும் ஆயுதப்படைகளின் செலவுக்கென அறுநூற்றுப் பத்தொன்பது கோடி ரூபாவை ஒதுக்கிக் கொடுத்ததைச் சாதனையில்லை என்று எவராலும் கூறமுடியாது.

வழக்கம் போல சிகரட், பீடி. சாராய விலைகளை இந்த முறை வரவு செலவுத் திட்டத்திலும் நிதி அமைச்சர் காட்டியுள்ளார்.

இதனையிட்டு சாதாரண மக்கள், அன்றாடம் உழைத்து உண்பவர்கள் பெரிது படுத்திக் கொள்ளப் போவதில்லை.

ஏனெனில் சிகரட், சாராயம் சம்பந்தப்பட்ட விடயங்கள் பெருங் 'குடி' மக்களுடன் சம்பந்தப்பட்டவை.

இவற்றின் விலை அதிகரிப்பினால், கடந்த சில நாட்களாக இவைகளை பதுக்கி வைத்திருந்த பெரும் 'முதலை' கள் லட்சக் கணக்கில் லாபம் பெற்றிருப்பார்கள். இத்தக் கறுப்புப் பணம் ஏழைகளுக்கு உதவப் போவதில்லை.

ஆனால் ரயில் கட்டணம், முத்திரை, தபால் அட்டை, தந்திக் கட்டணங்களை அதிகரித்ததானது ஏழை மக்களின் வயிற்றில் அடிக்கும் ஒரு செயலென்பதை நாம் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

வேலைக்கு சென்று வரும் மக்கள் போக்கு வரத்துக் கட்டண அதிகரிப்பால் எவ்வளவு தூரம் பாதிக்கப்படப் போகின்றார்கள்.

தபாற் கட்டண அதிகரிப்பால் ஏழை, எளிய மக்கள் பாதிப்பு எவ்வளவாகும்.

இவைகளையிட்டு 'கல்லாப் பெட்டி' அமைச்சரோ அரசாங்கமோ கிஞ்சித்தும்கூட சிந்தித்திருக்கும் போலத் தெரியவில்லை

பட்ஜட்டுக்கு முன்னர் அரிசி, சீனி,. மா, பாணின் விலை கஸட் மூலம் அறிவிக்கப்பட்டது போல, பட்ஜட்டுக்குப் பின்னால் பஸ் கட்டணம் உட்பட வேறு சில பொருட்களின் விலை அதிகரிப்பு அறிவிக்கப்பட்டாலும் ஆச்சரியமில்லை.

இத்தனை விலைவாசி, கட்டண உயர்வுகளை அறிவித்தபோதிலும், அரசாங்க தனியார் ஊழியர்கள் இதனால் அடையப் போகும் பாதிப்பை உணர்ந்தும், சிறு சம்பள அதிகரிப்பைக் கூட வழங்காதது மக்களை ஏமாற்றமடையச் செய்துவிட்டது.

ஆனைப்பசிக்கு சோளப் பொரி போடக் கூடவா, சாதனை வீரர் றொனி டிமெல் அவர்களால் முடியவில்லை!

பாவம் றொனி;

அடுத்த கஸட்டை அவர் தயாரிக்கட்டும்!

'புரன்ட்லைன்' சஞ்சிகையின் இம் மாதம் 2—15ம் திகதிய இதழில் மாலினி பார்த்தசாரதி, ரி. எஸ். சுப்பிரமணியம் ஆகிய இருவரும் கூட்டாக எழுதிய கட்டுரையின் தமிழாக்கத்தின் முதற்பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

# பண்டாரி எடுத்த முயற்சிகள் பெயரளவில்தான் பலித்தன

**பகுதி ஒன்று**

துப்பாக்கிகளை கீழே போடப் போவதாக இலங்கை அரசும் தமிழர் விடுதலைப் போராளிகளும் 4 மாதங்களுக்கு முன்னர் பிரகடனப்படுத்தினர். இரு தரப்புப் பிரதிநிதிகளும் அதனையடுத்து உரையாட ஆரம்பித்தனர். ஆனால் விடாப்பிடியான நிலைப்பாடுகளும் கோபாவேச தருக்கப் பரிமாறல்களும் புதிது உதித்த சமாதான நடைமுறையை அங்கவீனப் படுத்தக் கங்கணங்கட்டிக் கொண்டு நிற்பனபோலாயின.

உரையாடல்கள் உயிரிழந்து போகாதிருக்க இந்தியா அரும் பாடுபட்டது. ஓரளவாவது அவை நடந்தேறிச் செல்லத் துணையாக இரண்டு சாராருக்கும் ஏற்புடைய சில விடயங்களைக் குறிப்பிடும் தற்காலிக ஆவணம் ஒன்றையாவது முன்வைக்கும்படி இலங்கை அதிகாரிகள் வலிந்து கேட்டுக் கொள்ளப்பட்டனர். இந்திய வெளிநாட்டுறவுகள் செயலாளர் ரமேஷ் பண்டாரியின் தலைமையின் கீழ் இயங்கிய பாரத அதிகாரிகளின் இம் முயற்சி, பெயரளவில் மட்டுமே பலித்தது. தமிழர் தரப்பிற்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்த அந்த ஆவணம், அவர்களுக்கு வழங்க முன்வந்தது மிக அற்பமே தவிர வேறில்லை எனக் கூறி, அதனை அவர்கள் நிராகரித்தனர். 1985 செப்டெம்பரில், போரின் தற்காலிக நிறுத்தம் எனும் காரியமே கருத்தில் இடம்பெற, தமிழர் இன உரிமைப் பிரச்சினையின் ஏனைய அம்சங்கள் புறத்தே ஒதுக்கிவிடப்பட்டன.

உரிமைப் பிரச்சினைத் தீர்வு முயற்சி எனப்பட்ட நாடகம் உணர்ச்சி வேகங்கள் நிரம்பியது. அதன் மையமாக விளங்கிய உருப்படியான விடயங்கள் தொடர்பாக, இவை யாவற்றுக்கும் மத்தியில் எய்தப்பெற்ற முன்னேற்றமோ வெகு சொற்பம். உண்மையில் மன அமைதி குலைப்பதாகச் சம்பந்தப்பட்ட அனைவரையும் உறுத்திக்கொண்டிருந்தது இம் முன்னேற்றமின்மைதான்.

இலங்கைத் தீவின் அரசாங்கம் தமிழ் மக்களின் உரிமைகள் விடயத்தில் வழங்கத் தயாராக இருந்தது ஒன்று. தமிழ் மக்கள் இங்கு ஆகக் குறைந்த பட்சம் ஏற்றுக்கொள்ளச் சித்தமாக இருந்தது வேறொன்று. இவை இரண்டும் ஒன்றுக்கொன்று வெகு தொலைவில் இருந்தன இங்கிருந்தது ஓர் உருப்படியான, மிக அகன்ற இடைவெளி.

போர் இடைநிறுத்தச் சர்ச்சையின் பால் தமிழர் விடுதலை இயக்கங்கள் விசேட கருத்துச் செலுத்தின. கண்காணிப்புக் குழுவில் யார் யார் உறுப்பினராக அமர இருந்தனர்? குழு எங்ஙனம் தொழிற்படும்? அதன் முடிவுகள் எந்த அளவிற்குப் பகிரங்கமாகும்? அந்த முடிவுகள் எந்த அளவு பயன் தரும்? போர் நிறுத்த மீறல்கள் பற்றிய அறிக்கைகள் தொடராக வந்துகொண்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில், இயக்கங்களின் கருத்துப் போக்கும் மனக் கிலேசமும் நியாயமானவையே சமாதான நடைமுறை உறுதியாக, காத்திரமாக அமைதல் வேண்டும் எனும் அவைகளது நோக்கமே இவ்வாறு அவை விசேட கருத்துச் செலுத்தியமைக்குக் காரணமாயிற்று

தமிழர் போராட்டத்தின் ஓரங்கமாக அவர்களிற் சில பகுதியினர் போர்முனைக்குத் தள்ளப்பட்டுளர். இப்போராட்டத்திற்கு ஓர் அடித்தளம் உண்டு. இவ்வடித்தள எல்லைக் கோட்டில் இடம்வகிக்கும் மத்திய விடயங்களையிட்டு முன்னேற்றம் காணப்பட்டே ஆகவேண்டும். தற்போது சிலமாதங்களாகஎய்தப்பட்டுள்ள சமாதானத்தில் களங்கம் உண்டுதான். இருந்தாலும், இப்படியான ஒரு சமாதானம் கூட இன்னும் நன்றாக நீடிக்கவேண்டுமாயின், இம்முன்னேற்றம் அதற்கு அத்தியாவசியமானது. தமிழர்க்குச் சுயாட்சி, அதிகாரப் பரவலாக்கல் ஆகிய விடயங்கள் திருப்திகரமாகக் கருத்தில் இடம்பெறவேண்டும். இவ்வாறாக, முன்னேற்றம் காணப் பெறாவிட்டால், சமாதானம் செயற்கையான ஒன்றாகவே முடியும்.

செயலாளர் பண்டாரியின் குழுவானது, வெறும் தொப்பிக்குள்ளிருந்து உயிர் முயலை இழுத்தெடுக்கும் மந்திரவாதியின் பாணியில், பேச்சுக்கள் நடைபெற்றுச் செல்ல உதவும் தற்காலிக ஆவணத்தை முன்வைத்தது. ஆனால் அதன் சட்டக்கோப்பினுள் தமிழர்கள் எதிர்பார்த்தவை நிறைவேறும் சாத்தியக்கூறுகள் மிக மிக அற்ப சொற்பமாகவே தென்பட்டன. எவ்வாறாயினும், தொட்டதும் உடைந்து பயனிழந்துபோகும் முட்டை போல, நொய்ய ஒரு நிலை பேணும் சமாதானம் நிலைத்தற்கு, இந்த ஆவணத்தின் கண்ணுள்ள நாளைய சாத்தியக் கூறுகள் போதியனவல்ல.

தமிழர் விடுதலைப் போராளி இயக்கங்கள் ஆறுமே இத்தற்காலிக ஆவணத்தை முழுமையாக நிராகரித்துள்ளன. 1985, செப்டெம்பர் முற்பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இது குறித்து தமது ஐயப்பாடுகள்பற்றிய விபரமான ஒரு விளக்கத்தினை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பியிருந்தனர். இலங்கை அரசின் உடன்படாத நிலைப்பாட்டை இந்நகல் ஆவணம் எடுத்துக்காட்டுகிறது எனவும் அவ்விளக்கம் குறிப்பிட்டது. 'இலங்கையில் தமிழ் மக்கள் உயிர் வாழத்தானும் இன்றியமையாத அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த குறித்த சில விடயங்க' ளுக்கு இலங்கை அரசாங்கம் உடன்படாதிருந்தமையே இங்கு கருதப் பெற்றிருந்தது.

நான்கு தமிழர் விடுதலைப் போராளி இயக்கங்களைக் கொண்டிருந்தது ஈழம் தேசிய விடுதலை முன்னணி. அவையாவன, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், 'ரெலோ' இயக்கம், 'ஈ. பி. ஆர். எல். எஃவ்.' இயக்கம், 'ஈரோஸ்' இயக்கம் ஆகியனவாம். இம்முன்னணி தனது கருத்தை வெளியிட, மனம்போல நேரம் எடுத்தது. ஆனால் அப்படி அபிப்பிராயம் தெரிவித்தபோது பண்டாரிக்கு அது எடுத்தியம்பியது வருமாறு; 'ஜெயவர்த்தன அரசு இத்தேசிய நெருக்கடியை வெறும் மாகாண மறுசீரமைப்பு மட்டத்திற்குப் படியிறக்கிவிட முனைந்துள்ளது. தமிழரின் உரிமைக் கோரிக்கைகள் விடயம் முழுவதையும் அவ்வரசு எவ்வளவு சேட்டையாகக் கணித்துள்ளது என்பதை இம் முயற்சி நிரூபிக்கின்றது.'

'பின்னிணைப்பு- சி.' எனப்பட்ட பிரேரணை முன்வைக்கப்பட்டு இரண்டு நவெம்பர் மாதங்களாகி விட்டன. இது உருப்படியான, நம்பிக்கை பிறப்பிக்கும் ஒரு சட்டக்கோப்பினுள் சில நன்மைகளைத் தமிழருக்கு வழங்க முன்வந்தது எனப் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. (ஒருதலைபட்சமாக) ஜெயவர்த்தன அரசு அதனை நீக்கும் வரை அதன் நிலை அப்படியாகத்தான் இருந்தது.

ஜெயவர்த்தன அரசு தானாக முன்வைத்து, தானாகவே வலுவற்றதாக்கிய பின்னிணைப்பு-சி. இருக்கட்டும். அதனுடன் ஒப்பீடாக, மேற் கூறப்பட்ட ('வேர்க்கிங் பேப்பர்') தற்காலிக ஆவணமானது தமிழருக்குக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை எப்படி அணுகுகிறது? தமிழ் மக்களுக்கு உரித்தாக்க உத்தேசிக்கப்படும் அதிகாரங்களைப் பரிபாலிக்கும் ஒழுங்கமைப்புச் சபை அவற்றுள் ஒரு விடயமாகும். மற்றது, அங்ஙனம் உரித்தாக்கப்படவுள்ள அதிகாரங்கள் எவை என்பதாகும். இவ்வணுகுமுறையில், அதிகாரங்களைத் துண்டு துண்டாக்கி, கத்தரித்தும், வேண்டா வெறுப்பாகவுமே வழங்க இலங்கை அரசு முன் வந்துள்ளதாகத் தெரிகிறது.

பின்னிணைப்பு-சி.-யில் இடம் வகித்த பிராந்தியச் சபைகள் மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப் பெற்றவர்களைக் கொண்டு உருவமைக்கப் பெற்றவை. பிரதானமான காணி, அபிவிருத்தி சட்டமும் ஒழுங்கும் போன்ற துறைகளில் பரந்த, பரந்த, உருப்படியான அதிகாரங்கள் இப்பிராந்தியச் சபைகளுக்கு உரித்தாக்கப்படுவனவாக இருந்தன. இப்படியாக இச்சபைக்கு உரியனவல்லாத விடயங்கள் அனைத்தும் மத்திய அரசின் கைகளிலேயே எஞ்சியிருக்கும். இவற்றின் பொறுப்பு, அதாவது யாவற்றுக்கும் மேலான பொறுப்பு மத்தியஅரசினுடையது. இவை தவிர, இலங்கைத் தேசத்தின்

— 5ம் பக்கம் பார்க்க

★ அமெரிக்க குற்றச்சாட்டை சீனு மறுக்கிறது

# பாக்., ஈரான், தென்னுபிரிக்காவுக்கு அணுவாயுத விநியோகம் செய்யவில்லை!

(பீக்கிங்)

பாகிஸ்தானுக்கோ, தென்னுபிரிக்காவுக்கோ, ஈரானுக்கோ அணுவாயுத விநியோகம் எதையும் தான் செய்யவில்லை என்று சீனு மறுத்துள்ளது, சீனு மீது இக்குற்றச்சாட்டை அமெரிக்கா சுமத்தியிருந்தது. சர்வதேசப் பாதுகாப்பு நெறிகளை சீனு சரியாக அனுசரித்து வருகின்றது என்று சீன வெளிவிவகார அமைச்சரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, அமெரிக்கா சீனுவுடன் செய்து கொண்ட அணுவாயுதத் துறை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டாம் என்று அமெரிக்கப் பாராளுமன்றக் குழு ஒன்று ஜனதிபதி திரு. றேகுல்ட் றீகனைக் கேட்டுக்கொண்டுள்ளது.

அமெரிக்கக் காங்கிரஸும் இந்த ஒப்பந்தத்தை செயற்படவிடாது செய்யும் நிலைப்பாட்டுடன் இருப்பதாகவே கூறப்படுகிறது.

எதிர்ப்பு ஏதும் ஏற்படாவிடின் இவ்வருட இறுதியில் மேற்படி ஒப்பந்தம் தானுகவே அமுலுக்கு வந்துவிடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க செனட்சபை

## இறக்குமதியை பெருமளவு குறைக்க புதிய சட்டமூலம்

(லண்டன்)

அமெரிக்க செனட்சபை இறக்குமதிகளைப் பெருமளவில் குறைக்க நிறைவேற்றிய சட்ட மூலத்தைப் பல ஆசிய நாடுகள் வன்மையாகக் கண்டித்துள்ளன.

இப் புதிய சட்ட மூலத்தால் ஆடைகள் இறக்குமதி பெருமளவு குறைக்கப்படும்.

ஜனதிபதி திரு. றேகுல்ட் றீகன் தனது வீட்டோ அதிகாரத்தைபயன்படுத்தி இச்சட்ட மூலத்தை ரத்துசெய்வாரென பன்னிரண்டு ஆசிய நாடுகள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

# பயணிகள் பஸ் வெள்ளத்தில் தமிழகத்தில்விளைந்த விபரீதம்

(சென்னை)

தென்னுற்காடு மாவட்டத்திலுள்ள கொலத்தம்பட்டுக் கிராமத்தருகே பாலம் ஒன்றில் சென்றுகொண்டிருந்த பஸ் வெள்ளத்தில் மூழ்கியதால் அதில் பிரயாணம் செய்த ஐம்பத்திரண்டு பிரயாணிகளும் என்னவானுர்கள் என்று தெரியவில்லை என நேற்றுக்காலை அறிவிக்கப்பட்டது.

இப் பஸ் பெரியார் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க கடந்த பத்து நாட்களாகப் பெய்து வந்த அடைமழை இப்போது தணிந்து வருவதாக நேற்றுக் காலை சென்னையில் இருந்து வெளியான தகவல் தெரிவித்தது.

நேற்று முன் தினமிரவிலிருந்து சென்னையில் மழையில்லை என்றும் மாமூல் வாழ்க்கை மிக மெதுவாக வழமைக்குத் திரும்புவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உயர்ந்த பகுதிகளிலிருந்து வெள்ளம் வடிந்து கொண்டிருப்பதாகவும் சென்னை-விழுப்புரம் ரயில் சேவை ஒருவாரத்திற்கு ரத்துச் செய்யப்பட்டிருப்பதாகவும் மேலும் தகவல் வெளியாகியுள்ளது.

புதுச்சேரியில் பேய்மழையால் நாற்பத்தையாயிரம் பேர் வீடிழந்துள்ளதாகவும் முதலமைச்சர் பாரூக் சக-அமைச்சர்களுடன் சென்று பாதிப்புகளை நேரில் பார்வையிட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

மத்திய அரசிடம் புதுச்சேரி அரசு பத்துக்கோடிரூபா நிதியுதவி கோரியுள்ளது.

### பிந்திய செய்தி

இப் பஸ்ஸில் பிரயாணம் செய்தோரில் ஐம்பது பேர் மரணமாகிவிட்டனர் என நேற்றுப் பிற்பகல் அறிவிக்கப்பட்டது. இது இவ்வாறிருக்க, முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் வெள்ளம் பாதித்த இடங்களை நேரில் நேற்றுச் சென்று பார்வையிட்டார். மக்கள் கவலையில் தானும் பங்கேற்பதாக அவர் கூறியுள்ளார்.

### பண்டாரி...

... 4ம் பக்கத் தொடர்

'இறைமை, ஒருமைப்பாடு, ஐக்கியம், பாதுகாப்பு, என்பவற்றைப் பேணுதலும், பொதுவாகக் கூறுகில் இலங்கைக் குடியரசின் முன்னேற்றம் அபிவிருத்தி' முதலாயின சம்பந்தமான ஏனைய அதிகாரங்கள் எல்லாம் மத்திய அரசாங்கத்தினிடமே இருக்கும்.

நகல் பிரேரணைகளில் இடம்பெறும் மாகாண சபைகளே பரவலாகிய அதிகாரங்களைப் பரிபாலிக்கும் ஆனுல் அவற்றுக்கு வழங்கப்பட்ட சுயாட்சி அதிகாரம் முன்னரைவிட மிகக் குறைவு. உதாரணமாக, காணி அபிவிருத்தி, சட்டமும் ஒழுங்கும் ஆகியன தொடர்பான தத்துவங்கள் எண்ணிக்கையில் குறைவானவை, உருப்படியானவையுமல்ல, என்பதோடு ஆங்காங்கே வெட்டிக்கத்தரிக்கப்பட்டும் உள்ளன.

பிராந்தியச் சபைகளின் சட்ட ஆக்க, சட்டம் நிறைவேற்றும் அதிகாரங்களானவை பின்னிணைப்பு – சி. யில் மிகக் கரிசனையுடன் விபரிக்கப்பெற்றுள்ளன. இவை மாத்திரம் அல்லாது, பிராந்திய நீதாசன சேவைகள், பிராந்திய சிவில் சேவைகள் என்பவற்றுக்கும் அதன்கண் ஏற்பாடுகள்காணப் பெறுகின்றன. 'வேர்க்கிங் பேப்பர்' எனப்படும் தற்காலிக ஆவணத்தினிடத்தே இந்த அம்சங்களின்மையைப் பாரதூரமாகக் காணலாம். மாகாண சபைகளின் உரிமைகள் யாவை என்பது 'சாடைமாடையாகக்' காட்டப்பட்டுள்ள அதே சமயம், ஜனதிபதியின் உரிமைகள் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. மத்திய அரசு பூரண அதிகாரமுடையதாக இருக்கும் விடயங்களின் நிரல்களும் அதேயளவு தெட்டத்தெளிவாக அங்கு தரப்பட்டுள்ளன.

(தொடரும்)

குழந்தைகளுக்கு

## பிறருக்காக வாழ வேண்டும் என போதித்தல் அவசியம்

(புதுடில்லி)

ஆசிய ஜோதி பண்டித நேருவின் தொண்ணூற்ருருவது ஜனனதினம் நேற்று நாடெங்கும் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்பட்டது.

நாடெங்கும் பேரணிகள், கண்காட்சிகள் என்பன நடைபெற்றன.

நேருஸ்ரேடியத்திலும் பேரணி இடம் பெற்றது. தீன்மூர்த்தி பவனில் பொருட்



காட்சி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனையொட்டிப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி விடுத்துள்ள செய்தியில், ஆரோக்கியமான சுற்றுப்புற சூழ் நிலை அவசியமானது. தனக்கென வாழாது பிறருக்காக வாழ வேண்டும் என்று பெற்றேர் குழந்தைகளைச் சிந்திக்க வைக்க வேண்டும்'' என்று கூறியுள்ளார்.

## டாக்காவில்குண்டு வெடிப்பு: ஒருவர்மடிவு; இருவர்காயம்

(டாக்கா)

பங்களாதேஷ் தலைநகரான டாக்காவில் வர்த்தக நிலையமொன்றில் பயங்கரக் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது.

இதில் ஒருவர் மடிந்தார். இருவர் காயமடைந்தனர்.

அரசியல் கட்சி ஒன்றின் பொதுக் கூட்டம் இப்பகுதியில் நடைபெறுவதற்கு முன்னதாகக் கிளர்ச்சியாளர்கள் இக்குண்டை வெடிக்க வைத்ததாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

## டில்லியில் பாரத சர்வதேச வர்த்தகப் பொருட்காட்சி

(புதுடில்லி)

பாரத சர்வதேச வர்த்தகப் பொருட்காட்சியைப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி நேற்று புதுடில்லியில் ஆரம்பித்து வைத்தார்.

''பாரத செயல் நுட்பத்திறனை வெளியுலகம் அறிந்துகொள்ள இது நல்லதோர் வாய்ப்பாகும்'' என்று அவர் தன் பேச்சின்போது சொன்னுர்.

சோவியத் தலைவர் மீண்டும் உறுதி

## ஜெனீவா மாநாடு வெற்றி பெற முழுமையான உதவி

(மாஸ்கோ)

ஜெனீவா உச்சி மாநாடு வெற்றி பெற தான் தீவிரமான, ஆக்க பூர்வமான பணி புரியத்தயாராக இருப்பதாக சோவியத் தலைவர் திரு கொர்பசெவ் மீண்டும் உறுதியளித்துள்ளார்.

இம்மாதம் 19ம்– 20ம் திகதிகளில் இம்மாநாடு நடைபெறுகிறது என்பது தெரிந்ததே

தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தகவல்

## பாதுகாப்புப் படையினரால் 49 தமிழர்கள் படுகொலை!

(சென்னை)

யாழ்ப்பாணத்தின் பலபகுதிகளிலும் விமானப் படைத் தாக்குதலினுல் 49 தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று சென்னையிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அலுவலகத்திற்குக் கிடைத்த தகவல் தெரிவிப்பதாக நேற்றுக் காலை சென்னை வட்டாரங்கள் அறிவித்தன.

பாதுகாப்புப் படையினர் மூதூர், கம்பூர், கட்டைப் பறிச்சான் ஆகிய இடங்களில் குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தி எட்டுத் தமிழர்கள் கொல்லப்பட்டதாகவும் ஆறு தமிழர்கள் வெட்டிக் கொல்லப்பட்டனர் என்றும் இத்தகவல் மேலும் தெரிவித்தது.

## பாரதத்தில் பாக். நிதிமந்திரி பல விடயம் ஆராயப்படும்

(புதுடில்லி)

பாகிஸ்தான் நிதியமைச்சர் மாமூபல் ஹக் தற்போது பாரத விஜயம் மேற்கொண்டுள்ளார்,

அவர் பாரத நிதியமைச்சரையும் மற்றும் அதிகாரிகளையும் சந்தித்து இரு தரப்பு உறவுகள் மற்றும் பொருளாதாரத் தொடர்புகள் பற்றி விரிவாக ஆராய்வார் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

யூகோ. பாரதம் நம்பிக்கை

## ரஷ்ய, அமெரிக்க போட்டி மனப்பான்மை நீங்கும்

(பெல்கிரேட்)

ஜெனிவாவில் அமெரிக்க சோவியத் தலைவர்களுக்கிடையே இம்மாதம் நடைபெறவுள்ள உச்சிமாநாடு இவ்விருவல்லரசுகளுக்கும் இடையிலான போட்டா போட்டியைத் தவிர்ப்பதற்கு உதவும் என்று யூகோஸ்லேவிய ஜனதிபதியும் பாரததுணை ஜனதிபதியும் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

பாரதத் துணை ஜனதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் தனது யூகோஸ்லேவிய விஜயத்தின்போது இருதரப்பு உறவு விருத்திபற்றியும் விரிவாக விவாதித்தார்.

### சிக்கிம் கவர்னர் ராஜேஸ்வர்

(புதுடில்லி)

சிக்கிம் கவர்னராக திரு. பி. வி. ராஜேஸ்வர் நியமிக்கப்பட்டுள்ளதாக நேற்று புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

### ராஜினுமா

(புதுடில்லி)

பஞ்சாப் கவர்னர் திரு. அர்ஜுன்சிங் தனதுபதவியை ராஜினுமாச் செய்துள்ளதாக நேற்றுப் பிற்பகல் அறிவிக்கப்பட்டது.

### மந்திரி மரணம்

(மாஸ்கோ)

சோவியத் நிதியமைச்சர் மரணமாஞர் என நேற்று அறிவிக்கப்பட்டது.

### மலரஞ்சலி

(புதுடில்லி)

புதுடில்லியிலுள்ள பண்டித நேருவின் சமாதிக்குப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி தனது சக மந்திரிகளுடன் சென்று மலரஞ்சலி செலுத்திஞர்.

ஈழமுரசு

# பஸ் விபத்தில் 40 பேர் பலி; 37 சடலங்கள் மீட்கப்பட்டன

(சென்னை)

தமிழ்நாடு, தென் ஆற்காடு மாவட்டத்தில் இடம்பெற்ற பஸ் விபத்தொன்றில் நாற்பதுக்கு மேற்பட்டவர்கள் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. சென்னையிலிருந்து திருவண்ணாமலைக்குச் சென்று கொண்டிருந்த இந்த பஸ் தொண்டியாற்றில் ஏற்பட்ட திடீர் வெள்ளப் பெருக்கால் விபத்திற்குள்ளானது. ஐம்பத்து மூன்று பயணிகளுடன் சென்று கொண்டிருந்த இந்த பஸ்ஸில் இருந்து நான்கு பயணிகள் மட்டுமே உயிர் தப்பியுள்ளதாக நேற்று மாலை அறிவிக்கப்பட்டது. முப்பத்தேழு சடலங்கள் நேற்று இரவு வரை மீட்கப்பட்டன.

இன்று ஆஸ்பத்திரி பொறுப்பேற்பு:

# தனியார் மருத்துவ கல்லூரிக்கு மூளாயில் 3 வீடுகள் அன்பளிப்பு

வ. இலங்கை தனியார் மருத்துவக் கல்லூரிக்காக இன்று மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை பொறுப்பேற்கப்படவுள்ளது. இதற்கான ஒப்பந்தம் இன்று இரு பகுதியாலும் கைச்சாத்திடப்படவுள்ளது. இதன் பின்னர் இன்று முதல் மூளாய்கூட்டுறவு வைத்தியசாலையில் வட இலங்கை மருத்துவர் சங்க வைத்தியர்கள் மாற்று நேரப்படி கடமையாற்றுவார்கள் என அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை மூளாய் வைத்தியசாலைப் பகுதியில் உள்ள மூவர் தமது வீடுகளை இந்த மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு விடுதிகள் நடாத்த கொடுத்துதவ முன்வந்துள்ளனர்.

அடுத்த ஜனவரி மாதம் முதல் இங்கு இத்தனியார் மருத்துவக் கல்லூரி இயங்கவிருப்பது தெரிந்ததே.

## புங்குடுதீவில் மின்சாரம் முற்றுகத் துண்டிக்கப்பட்டது

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் மின் விநியோகம் முற்றுகத் தடைப்பட்டுள்ளது. கடந்த ஒரு வாரகாலமாக இந்நிலை நிலவுகிறது. மின் கம்பங்கள் சில வெள்ளத்துள் சாய்ந்து விட்டமையே இதற்குக் காரணமாம்.

இதேவேளையில் புங்குடுதீவு கிழக்குப் பகுதியில் உள்ள வீடுகளுக்குக் கடந்த இருமாதங்களுக்குமேலாக மின் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. மின் கம்பி ஒன்று அறுந்து போனமையே இதற்குக் காரணமாம். இதனை மின்சார சபையினர் இதுவரை திருத்தவில்லை.

மாதக்கணக்காக மின்விநியோகம் துண்டிக்கப்பட்ட நிலையில் இப்பகுதி மின் பாவனையாளர்கள் அவதியுறுகிறார்கள்.

அவர்களிடமிருந்து மாதந்தோறும் மின்கட்டணம் மட்டும் மின்சார சபையினுல் ஒழுங்காக அறவிடப்படுகிறது. மின் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டதற்கான தண்டனையா இது? என்று மக்கள் வினவுகிறார்கள்.

## பதற்றம்

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு மாங்குளம் வீதியில் கடந்த ஞாயிறு இடம்பெற்ற சம்பவத்தை தொடர்ந்து இப்பகுதியூடாக சீருடையினர் நடைபவனியாகவும், வாகனத்திலும் ரோந்து புரிகின்றனர். இதனுல் இங்கு பதற்றம் நிலவுகிறது. ஹெலிகப்டரும் வானத்தில் அடிக்கடி வட்டமிடுகிறது.

## இருவர் விடுதலை

(ஒட்டுசுட்டான்)

நெடுங்கேணியில் இருந்து ஒட்டுசுட்டான் நோக்கி நடைபவனியாக வந்த ஆயுதப் படையினர் பண்டாரிக்குளத்தில் நான்கு இளைஞர்களையும் தம்முடன் அழைத்துச் சென்றதாக தெரிகிறது. அங்கு நிறுத்தப்பட்டிருந்த உழவு யந்திரத்தையும் தம்முடன் எடுத்துச் சென்றனர்.

அந்த நான்கு இளைஞர்களில் இருவர் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

### தமிழ்ப்

...1ஆம் பக்கத் தொடர்

மறு அறிவித்தல் வரை வழங்கக் கூடாதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதி வழியாக வாகனங்களில் செல்லும் வெளிநாட்டவர்களைக் கண்டு பிடிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கண்காணிப்பு முகாம்கள் பணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

### அரசாங்க...

1ஆம் பக்கத் தொடர்.

மக்கள் தனிமையாகவோ, குழுக்களாகவோ தமது முறைப்பாடுகளை தெரிவிக்கலாம் என்ற அரசின் அறிவித்தல் பிரசுரங்கள் இங்குள்ள அரச அலுவலகங்களில் ஒட்டப்பட்டுள்ளன.

### ஜீ. சி. ஈ. பரீட்சை...

மாதம் 7-ம் திகதி முதல் 16-ம் திகதி வரை நடைபெறுமென்று பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் இப்பரீட்சையினைச் சீராக நடத்துதற்கான ஏற்பாடுகளை யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. ம. சிமியாம்பிள்ளை மேற்கொண்டுள்ளார்.

## ரசிகமணி எட்டாவது நினைவு விழா

ரசிகமணி, இலக்கியச் செல்வர் அமரர் கனக செந்திநாதன் எட்டாவது நினைவு தினம் இம் மாதம் 17-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் சபை மண்டபத்தில் காலை 9-30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நினைவு நாள் உரையை பண்டிதர் க. சச்சிதானந்தம் நிகழ்த்துவார்.

"ரசிகமணி ஒரு நோக்கு" என்ற தலைப்பில் நடைபெறும் கருத்தரங்கில் திரு. சிவமகாலிங்கம், திரு. கே. ரி. பாலசுப்பிரமணியம், செம்பியன் செல்வன், சொக்கன், கலாகேசரி ஆ. தம்பித்துரை, பி நடராஜன் ஆகியோர் உரையாற்றுவர். திரு. க. குணராசா பிரதிமைப் படத்துக்கு மாலை சூட்டிக் கௌரவிப்பார்.

## பாடசாலை பொருட்காட்சி மாணவர்களை வளர்க்கும்

(பண்டத்தரிப்பு)

"பாடசாலைப் பொருட்காட்சிகள் மாணவரது கல்வி மேம்பாட்டிற்குஊக்கத்தையும் வாழ்க்கையில் தன்னம்பிக்கையும் கொடுக்கின்றன. மாணவர்கள் தாம் வகுப்பில் கற்றவற்றை செயலில் உருவமைக்கும் சந்தர்ப்பத்தை, அவர்களது கைவண்ணத்தை, திறனை வெளிக்கொணரும் வாய்ப்பை ஏற்படுத்துகின்றன.

மேற்கண்டவாறு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி இளைஞர் வருடத்தையொட்டி நடைபெற்ற பல்துறைப் பொருட்காட்சியை யாழ். கல்விப் பணிப்பாளர் சார்பில் திறந்து வைத்துப் பேசுகையில் வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வியதிகாரி திரு. ப. சண்முகராஜா சொன்ஞர்.

கல்லூரி அதிபர் திருமதி ஆறுமுகதாசன் தமது தலைமையுரையில், கற்கும் கல்வி ஏட்டுச் சுரைக்காயாக இருக்காது நிஜ வாழ்வில் உதவவேண்டும். அதற்கு புத்தகப்படிப்பு அனுபவ அறிவாக ஆற்றலாக வளர பொருட்காட்சி அமைப்புகள் சாதனங்களாக்கப் படுகின்றன என்ருர்.

### தொலைபேசி....

...1ஆம் பக்கத் தொடர்

தொண்ணூறு சதமாக விருந்தது. அத்துடன் றசீட்டில் ஒப்பமிடுவதற்கான முத்திரைக் கட்டணம் ஒரு ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. முன்னர் 50 சத முத்திரையே இதற்குப் பயன்பட்டது.

### ஜீ. சி. ஈ...

...1ஆம் பக்கத் தொடர்

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை, மானிப்பாய், கோப்பாய் ஆகிய வட்டாரங்களில் கடமையாற்ற இருக்கும் மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குநர்களுக்கு காலை 9-30 மணிக்குகூட்டம்நடைபெறும். ஏனையோருக்கு காலை 11-00 மணிக்கு கூட்டம் நடைபெறும்.

## புதிய மூன்று ஆளுநர்கள்

(புதுடில்லி)

பஞ்சாப், ஆந்திரப்பிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களுக்கு புதிய ஆளுநர்கள் நேற்று நியமிக்கப்பட்டனர்.

### கண்ணிவெடி...

—1ஆம் பக்கத் தொடர்

சுமார் அறுபது பேரின் சாட்சியங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டன. குழு உறுப்பினர் நீதியரசர் மொகமட் ஹுசேன் தலைமையில் விசாரணைகள் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் ஐந்து பொலிஸார் காயமடைக் காரணமாகவிருந்த கண்ணிவெடித் தாகுதல் நடைபெற்ற இடம், ஒன்பது தமிழர்கள் கொலை செய்யப்பட்ட இடம் ஆகியவைகளையும் கண்காணிப்புக் குழுவினர் நேற்றுச் சென்று பார்த்தனர்.

### இறைச்சி உண்ட...

...1ஆம் பக்கத் தொடர்

யில் உள்ள ஒரு இறைச்சிக் கடையில் இது வாங்கப்பட்டதாகவும், அது பழுதடைந்து இருந்ததாகவும் தெரியவருகிறது.

தற்போதைய சூழ்நிலையில் சில இறைச்சிக்கடைகள் இவ்வாறு பாவனைக்கு தவாத இறைச்சிகளை விற்று வருவதை சம்பந்தப்பட்டவர்கள் கவனிக்கும்படி புகார் செய்யப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### தாமோதரம் வல்லிபுரம்

சாவகச்சேரி சப்பச்சிமாவடி தாமு வல்லிபுரம் காலமானுர். இவர் தாமோதரம்பிள்ளை, தையல்நாயகி, சுந்தையா, கணேஸ், பொன்னம்பலம் ஆகியோரின் தந்தையாவார். இறுதிக்கிரியைகள் இன்று 15-11-85 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கண்ணுடிப் புட்டி மயானத்தில் நடைபெறும்.

## மரண அறிவித்தல்

### அந்தோனிமுத்து வேதநாயகம்

(கிராம சேவையாளர், சங்கானை வடக்கு)

சில்லாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற அந்தோனிமுத்து தம்பதிகளின் மகன் வேதநாயகம் காலமாகி விட்டார். இவர், டொமினிக்கா புனிதத்தின் அன்புக் கணவரும் திருமதி கில்டா யோசவ் அவர்களின் அருமைச் சகோதரரும், லூயிசம்மா யோனுஸ் அவர்களின் அன்பு மருமகனும், கொழும்பு கஜோஸ் கம்பெனி உரிமையாளர் வி யோசவ் அவர்களின் மைத்துனரும், திருமதி ஷேர்ளி மேவின், காலஞ்சென்ற லிசி யோசவ், வின் யோசவ், கொன்ஸ்ரன்ரைன் மேவின் (Lanka Cement Ltd) ஆகியோரின் மாமனுரும், றெஜி இம்மனுவேல், மாகிறற் ஏபிரகாம், டொமற்றிலடா யோனுஸ், வில்சன் யோனுஸ் (National and Grindlays Bank) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னுரின் இறுதி வழிபாடுகள் 16-11-85 சனிக்கிழமை மாலை 3.30 மணியளவில சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்தில் நடைபெற்று பின்னர் சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

## மரண அறிவித்தல்

### திருமதி. அன்னரத்தினம் வைத்தியலிங்கம்

திருமதி. அன்னரத்தினம் வைத்தியலிங்கம் காலமானுர். இவர் காலஞ்சென்ற திரு. R. வைத்தியலிங்கம் (ஸ்தாபகர் R. வைத்தியலிங்கம் லிமிட்டெட் பதுளை) அவர்களின் அன்பு மனைவியும், புங்குடுதீவைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. திருமதி. M. R. இராமநாதனின் அருமை மகளும், திருமதி. ஞானம்மா அரியநாயகம் (மலேசியா), திரு. R. S. அரியரத்தினம் (ஓய்வுபெற்ற சிறுப்பர், இலங்கை வங்கி), காலஞ்சென்ற திருமதி. சற்குணம் நாகலிங்கம், திருமதி. அருளம்மா துரைரத்தினம், திருமதி. பரிமளம் சௌந்தரராஜா, திரு. R. J. நவரத்தினம் (ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்), திரு. R. J. குணரத்தினம் (உரிமையாளர் சீமா சில்க் இன்டஸ்ரீஸ் லிமிட்டெட், திருநெல்வேலி) ஆகியோரின் அன்புச் சகோதரியும்; திரு. R. முத்தையா (அதிபர் R. வைத்தியலிங்கம் லிமிட்டெட், பதுளை), திருமதி. அலிஸ், ஜெபம், இராணி ஆகியோரின் அருமை மைத்துனியுமாவார். அன்னுரின் பூதவுடல் 16-11-85 சனிக்கிழமை காலை 9 மணிக்கு "சாந்திநிகேதன்", இல. 50, பலாலி வீதி, கோண்டாவிலில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு, கொட்டடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

'ஈழமுரசு' சாயிபாபா அட்வாடைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 15-11-1985 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி 23336